தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகம்
களியக்காவிளை

ந.க.எண். 75/2022/அ1 நாள் : **17.05.2022**

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளை தேர்வுநிலை பேரூராட்சியில் **2022–2023** ஆம் ஆண்டு டிஸ்ட்றிக்ட் மினரல் பவுண்டேஷன் டிரஸ்ட் பண்ட் (PMKKKY) திட்டத்தில் கீழ்க்கண்ட வேலையினை செய்து முடிப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட இரு உறை ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | வேலையின் பெயர் | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில்) | டேவணித் தொகை ரூ. | ஒப்பந்த நமுனா ரூ. | வேலை முடிக்க வேண்டிய காலம் | ஒப்பந்தக் காரரின் தகுதி |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | களியக்காவிளை பேரூராட்சிக்குட் களியக்காவிளையில் எலக்ட்ரானிக் எடைமேடை (9.00X3.00 = 60T ) கேபின்அறை, மற்றும் பிட் (Pit) அமைத்தல். | 17.25 | 17250 | 6240 | 3 மாதங்கள் | மூன்றாம் வகுப்பு மற்றும் அதற்கு மேலும் |

மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் களியக்காவிளை பேரூராட்சியின் சார்பாக செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் **09.06.2022**–ம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் **3.00** மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிட்ட உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதி சமர்ப்பிக்க வேண்டும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் **09.06.2022**–ம் தேதி வியாழக்கிழமையன்று பிற்பகல் **3.30** மணிக்கு பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் திறந்து பரிசீலனை செய்யப்படும். வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை **08.06.2022**–ம் தேதி புதன்கிழமை பிற்பகல் **5.00** மணி வரை இப்பேரூராட்சி அலுவலகத்தில் உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தநமுனா கட்டணம் திரும்ப வழங்கப்படமாட்டாது. மேலும் ஒப்பந்தபுள்ளி படிவங்கள் **https://tenders.tn.gov.in** மற்றும் **http://townpanchayats.tn.gov.in/tender** என்ற இணையதள முகவரியில் இருந்து கிரையமின்றி பதவிறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தபுள்ளி கோரப்படும் நாள் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டால் அடுத்து வரும் வேலை நாளில் ஒப்பந்தப்புள்ளி நடைபெறும். இதர விவரங்கள்அலுவலக வேலை நாட்களில் நேரில் தெரிந்து கொள்ளலாம்

| | | |
|---|---|---|
| 1 | Date form which tender documents can be downloaded | 19.05.2022 |
| 2 | Date of pre-bid-meeting | 06.06.2022 |
| 3 | Date of Tender | 09.06.2022 |
| 4 | Last date and time for the submission of tender | 09.06.2022 upto 3.00 pm |
| 5 | Date and time of opening the Technical Bid | 09.06.2022 3.30 pm |
| 6 | Technical bid evaluation | 10.06.2022 |
| 7 | Price bid opening | 13.06.2022 |

## ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்

1. ஒப்பந்தக்காரர்கள் இப்பேரூராட்சியின் பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர்களாக இருக்க வேண்டும். மற்றும் ஒப்பந்தத்தில் கலந்து கொள்ள தகுதியுடைய இதர துறைகளில் ஒப்பந்ததாரராக இருந்து அவர்கள் ஒப்பந்தப்புள்ளி கொடுத்தால் ஒப்பந்ததாரராக உடன் பேரூராட்சியில் பதிவு செய்ய உரிய ஆவணங்களைக் கொடுத்து பதிவு செய்ய வேண்டும்.
2. நிர்ணயிக்கப்பட்ட வைப்புத் தொகை வங்கி வரைவோலையாக செலுத்தப்பட வேண்டும். வங்கி வரைவோலை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகளும், குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு கொடுக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும், எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
3. வங்கி வரைவோலையானது, செயல் அலுவலர், களியக்காவிளை பேரூராட்சி (Executive Officer, Kaliakkavilai Town Panchayat) என்ற பெயரில் இந்தியன் வங்கி களியக்காவிளை கிளையில் மாற்றத்தக்க வகையில் எடுக்கப்பட வேண்டும்.
4. செலுத்தப்படும் டேவணித் தொகைக்கு எவ்வித வட்டியும் வழங்கப்பட மாட்டாது.
5. மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில் ஒப்பந்தக்காரரின் முழு அஞ்சல் முகவரி தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். ஒவ்வொரு உறையின் (கவரின்) மீதும் எந்த வேலைக்கு என்பதை தெளிவாக எழுதி செயல் அலுவலர், களியக்காவிளை தேர்வுநிலை பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம் என பெறுநர் முகவரியும், அனுப்புநர் முகவரியும் தெளிவாக எழுதப்பட வேண்டும்.
6. பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஏதேனும் ஒன்றையோ அல்லது அனைத்து ஒப்பந்தபுள்ளிகளையோ எவ்வித காரணம் கூறாமல் ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு.
7. வரப்பெற்று முடிவு செய்யபட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்ற அங்கீகாரத்திற்கு உட்பட்டது.
8. ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு வேலை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட மூன்று தினங்களுக்குள் 1% கூடுதல் வைப்புத்தொகை செலுத்தி ரூ.50/– மதிப்புள்ள முத்திரைத் தாளில் செயல் அலுவலர் தெரிவிக்கும் வாசகப்படி உடன்படிக்கை எழுதித் தர வேண்டும்.
9. வேலை உத்திரவில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்குள் வேலையை முழுமையாக முடித்துக் கொடுக்க வேண்டும். இல்லையேல் வேலையை ரத்துச் செய்யவும், அபராதம் விதிக்கவும் செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. இதனால் ஏற்படும் எல்லா இழப்புக்கும் ஒப்பந்தக்காரர்களே முழு பொறுப்பாவார்கள்.
10. ஒப்பந்தப்புள்ளி கொடுத்த பின்பு பின்வாங்கும் ஒப்பந்தக்காரர்களின் டேவணித் தொகையும் மேலே கண்டுள்ள பத்தி – 9 ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை சரிவர நிறைவேற்றாத

ஒப்பந்தக்காரரின் வைப்புத் தொகைகளும் எவ்வித அறிவிப்பும் இன்றி பறிமுதல் செய்யப்படும்.

11. குறிப்பிட்ட தேதிக்குள் வேலையை ஆரம்பிக்காவிட்டால் ஒப்பந்தக்காரரால் அவ்வேலைக்கென செலுத்தப்பட்ட டேவணித் தொகை பறிமுதல் செய்ததாகக் கருதப்பட்டு, பேரூராட்சியின் நிதியில் சேர்க்கப்படுவதுடன் அவ்வேலைக்கு மீண்டும் வேறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு வேலை செய்து முடிப்பதில் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும், முந்தைய ஒப்பந்தக்காரரே பொறுப்பு ஏற்க வேண்டும்.

12. ஒப்பந்தக்காரர்களே பணிகள் செய்ய தேவையான பொருட்கள் சொந்த செலவில் வாங்கிக் கொள்ள வேண்டும். இதன் பொருட்டு, வேலைகள் பாதிக்கப்படக்கூடாது. இதற்கு சம்மதம் அளிக்கும் நபர்கள் மட்டுமே டெண்டர் கொடுக்க வேண்டும்.

13. வேலைக்கென சேகரம் செய்யப்படும் பொருள்கள் செயல் அலுவலர் அல்லது பொறியாளரால் நிராகரிக்கப்பட்டால், ஏழு தினங்களுக்குள் அப்பொருட்களை அப்புறப்படுத்திக் கொள்வதுடன், பொறியாளரால் ஏற்றுக் கொள்ளப்படும் வகையில் தரம் வாய்ந்த மாற்றுப் பொருட்களை வேலை நடக்கும் இடத்தில், ஒப்பந்தக்காரர் சேகரித்தல் வேண்டும். தவறினால் நிராகரிக்கப்பட்ட பொருட்கள், பேரூராட்சிப் பொருட்களாக கருதி அப்புறப்படுத்தப்படும்.

14. யாருடைய டெண்டர் ஏற்றுக் கொள்ளப்படவில்லையோ அவரால் செலுத்திய டேவணித் தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பிக் கொடுக்கப்படும்.

15. மதிப்பீடு விகிதத்திற்கு மிக குறைவாக ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ளதாக செயல் அலுவலர் கருதுவாராகின் செயல் அலுவலரால் தெரிவிக்கப்படும் சதவிகிதத்தில் கூடுதல் வைப்புத் தொகை ஒப்பந்தக்காரர் கண்டிப்பாக செலுத்திய பிறகே வேலை உத்திரவு வழங்கப்படும். கூடுதல் வைப்புத்தொகை செலுத்தப்பட வில்லை எனில் ஒப்பந்த வைப்புத்தொகை பறி முதல் செய்யப்பட்டு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்படும்.

16. வேலையை முடித்த பின்னர் பட்டியல் விதிமுறைகளுக்கு உட்பட்டு தொகைகள் பிடித்தம் செய்யப்பட்டு மீதித் தொகை மட்டும் பட்டுவாடா செய்யப்படும். திட்டநிதி பெறப்பட்ட பின்னரே தொகை பட்டுவாடா செய்யப்படும்.

17. வேலை முடிவு இறுதி பட்டியலில் 4 % காப்பு தொகை, 1% வருமான வரி , 2%, சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் 1 % தொழிலாளர் நலநிதியும் பிடித்தம் செய்யப்படும்.

18. தொடர்புடைய வேலைகளுக்கான பட்டியல் தணிக்கை செய்யப்பட்டு தணிக்கைத் தடை ஏதும் இல்லையென முடிவு தெரிந்த பின்னர்தான் அவ்வேலைகளுக்கான ஒப்பந்தக்காரரால் செலுத்தப்பட்ட டேவணித் தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பித் தரப்படும்.

19. வேலைகள் சம்பந்தமாக அவ்வப்போது அரசினால் வெளியிடப்படும் உத்திரவுகளுக்கு உட்பட்டு ஒப்பந்தக்காரர்கள் வேலைகள் செய்ய வேண்டும்.

20. ஒப்பந்ததாரருக்கு ஒப்படைக்கும் பணி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் துறை நடவடிக்கையான அபராதம் மற்றும் ஒப்பந்தம் ரத்து செய்வதை ஒப்பந்தக்காரர் தவிர்க்க வேண்டும்.

21. வேலைகள் நடைபெறுவதை பல்வேறு நிலைகளில் புகைப்படம் எடுத்து, (வேலை ஆரம்பிக்கும் முன்னர், வேலை நடைபெறும் ஒவ்வொரு நிலையிலும் மற்றும் முடிவுநிலை ) இறுதி பட்டியலுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும், தவறினால் தொகை வழங்கப்பட மாட்டாது.

22. பணி நடைபெறும் இடத்தில் எந்த திட்டத்தில் பணி மேற்கொள்ளப்படுகிறது, மதிப்பீட்டு தொகை, பணி முடியும் நாள் ஆகிய விபரம் குறித்த தரமான தகவல் பலகைகள் அதாவது 4 அடி x 2 1/2 அடி (1.20அx0.75அ) வைக்கப்பட வேண்டும்.

## சிறப்பு நிபந்தனைகள்

1) ஒப்பந்தக்காரர் கடந்த 3 ஆண்டுகளில் ஏதாவது ஒரு ஆண்டில் குறிப்பிட்டுள்ள வேலையின் மதிப்பீட்டிற்கு **மொத்தப் பணிகள் 2 1/2 மடங்குக்கு** குறையாமலும் மேற்காணும் வேலையில் கண்டுள்ள பணி போன்று ஒன்றினை குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டிற்கு 50% - க்கு

குறையாமல் கடந்த **3** ஆண்டுகளில் ஏதேனும் ஒரு ஆண்டில் **ஒரு பணி செய்து** முடித்திருக்க வேண்டும். அதற்கான சான்றொப்பம் பெற்று சான்றிதழ்களின் நகல்கள் இணைக்கப்பட வேண்டும். இது போன்ற முன் அனுபவ சான்றிதழ்கள், கடந்த **5** வருட தணிக்கை செய்யப்பட்ட இறுதி இருப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்ட தகுதிச் சான்றிதழ்கள் இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

2) மேற்படி பணிக்கு தேவையான Mini Tipper Lorry -2, Water Tanker-1, Concrete Mixer Machine -1, J C B / Earth Remover -1, போன்ற இயந்திரங்கள் மற்றும் Centering M S Sheets- 100 sqm, சொந்தமாகவோ (அல்லது) வாடகைக்கு வைத்துள்ள ஒப்பந்ததாரர்கள் அதற்கான ஆவணங்கள் ஒப்பந்தபுள்ளியுடன் இணைத்திருக்க வேண்டும்.

3) தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி தனி உறையிலும், விலை ஒப்பந்தபுள்ளி தனி உறையிலும் குறிப்பிட்டு ஒரு உறைக்குள் வைக்கப்பட வேண்டும் என்ற இரண்டு உறை நடைமுறை விதிகளை பின்பற்றப்பட வேண்டும். தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளியில் தகுதி பெற்றால் மட்டுமே விலை ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும்.

4) ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு பெறும் ஒப்பந்தக்காரர் மூன்றாண்டுகளுக்கு குறையாமல் இப்பணியில் ஏற்படும் குறைபாடுகளை அவர்களது சொந்த செலவில் சீரமைக்க வேண்டும்.

5) குறிப்பிட்ட கால கெடுவுக்குள் வேலை முடிக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் தினசரி ரூ. 500/– அபராதம் விதிக்கப்படும். அபராத தொகை மதிப்பீட்டிற்கு 1% மேலானால் ஒப்பந்தம் ரத்து செய்யப்படும். இதனால் ஏற்படும் சகல இழப்பிற்கும் தாங்களே பொறுப்பாவீர்கள்.

செயல் அலுவலர்,
களியக்காவிளை பேரூராட்சி
கன்னியாகுமரி மாவட்டம்.

<u>பெறுநர்:</u>

பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள், களியக்காவிளை பேரூராட்சி.

<u>நகல்:</u>

1. அலுவலக விளம்பர பலகை.
2. மாவட்ட ஆட்சித் தலைவர் கன்னியாகுமரி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகின்றது.
3. உதவி இயக்குநர், நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகள் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகின்றது.
4. உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள் கன்னியாகுமரி மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
5. துணை கண்காணிப்பாளர் ஊழல் மற்றும் லஞ்சஒழிப்புதுறை, கன்னியாகுமரி மாவட்டம்.
6. இளநிலை பொறியாளர், களியக்காவிளை பேரூராட்சி.
7. சம்பந்தப்பட்ட கோப்பு.